# ஜனவரி – 21 – பொதுக்கால 03ம் ஞாயிறு

**“என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்” (மாற்.1:17)**

---

## முதல் வாசகம் : யோனா 3 : 1 – 5, 10

இரண்டாம் முறையாக யோனாவுக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. அவர், ”நீ புறப்பட்டு நினிவே மாநகருக்குப் போய், நான் உன்னிடம் சொல்லும் செய்தியை அங்குள்ளோருக்கு அறிவி” என்றார். அவ்வாறே யோனா புறப்பட்டு ஆண்டவரது கட்டளைப்படி நினிவேக்குச் சென்றார். நினிவே ஒரு மாபெரும் நகர். அதைக் கடக்க மூன்றுநாள் ஆகும். யோனா நகருக்குள் சென்று, ஒரு நாள் முழுதும் நடந்தபின், உரத்த குரலில், ”இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்” என்று அறிவித்தார். நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பிருக்க முடிவு செய்தார்கள். பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக் கொண்டனர். கடவுள் அவர்கள் செய்தது அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளினின்று விலகியதை அவர் கண்டு, தம் மனத்தை மாற்றிக் கொண்டார் தாம் அவர்கள்மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த தண்டனையை அனுப்பவில்லை.

**பதில்பாடல்:** ஆண்டவரே உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும்.

## இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 7 : 29 - 31

அன்பர்களே, நான் சொல்வது இதுவே இனியுள்ள காலம் குறுகியதே இனி மனைவி உள்ளவரும் மனைவி இல்லாதவர் போல இருக்கட்டும். அழுபவர் அழாதவர் போலவும், மகிழ்ச்சி யுறுவோர் மகிழ்ச்சியற்றவர் போலவும், பொருள்களை வாங்குவோர் அவை இல்லாதவர் போலவும் இருக்கட்டும். உலகச் செல்வத்தைப் பயன்படுத்துவோர் அவற்றில் முழுமையாக ஈடுபடாதவர் போல் இருக்கட்டும். இவ்வுலகு இப்போது இருப்பது போல் நெடு நாள் இராது.

## நற்செய்தி : மாற்கு 1 : 14 - 20

யோவான் கைதுசெய்யப்பட்டபின், கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டே இயேசு கலிலேயாவிற்கு வந்தார். காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்” என்று அவர் கூறினார். அவர் கலிலேயக் கடலோரமாய்ச் சென்றபோது சீமோனையும் அவர் சகோதரரான அந்திரேயாவையும் கண்டார். மீனவர்களான அவர்கள் கடலில் வலை வீசிக்கொண்டிருந்தார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, ”என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்” என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள். பின்னர், சற்று அப்பால் சென்றபோது செபதேயுவின் மகன் யாக்கோபையும் அவர் சகோதரரான யோவானையும் இயேசு கண்டார். அவர்கள் படகில் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார்கள். உடனே இயேசு அவர்களையும் அழைத்தார். அவர்களும் தங்கள் தந்தை செபதேயுவைக் கூலியாள்களோடு படகில் விட்டுவிட்டு அவர் பின் சென்றார்கள்.

**தியானம்:** மனிதன் நிறைவான வாழ்வைப் பெற்று வாழ வேண்டும் என்பதே தேவனுடைய இதய தாகம். “நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன்.” (யோவான்10:10). ஆனால் நமது வாழ்வில் அலகை நம்மை பாவத்தில் வீழ்த்தி நம்மிடம் தேவன் கொடுத்த மகிழ்ச்சியை, சமாதானத்தை, நிறைவைத் திருடி குழப்பங்களையும், வேதனைகளையும், துன்பங்களையும் கொடுத்து மனிதனை பயனற்றவனாக, காயங்கள் நிறைந்த மனிதனாக, பிறருக்கு வேதனைகளைக் கொடுக்கும் மனிதனாக, பிறரோடு தன்னை ஒப்பிட்டுப்பார்த்து கவலைப்பட்டுக் கொண்டிருப்பவனாக அவனை மாற்றிவிடுகின்றான். பாவத்தால் சாத்தானின் பிடியில் கட்டப்பட்ட இத்தகைய மனிதர்களை விடுவித்து அவர்களை மீண்டும் கடவுளில் இணைக்கக்கூடிய மனிதர்களை கடவுள் இன்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கின்றார். பாவமும், பலவீனமும் பெருகிப்போன இந்த இருளான உலகத்து மனிதர்களை மீட்டு மீண்டும் இயேசுவின் பிள்ளைகளாக மாற்ற நீ தயாராக இருக்கின்றாயா? தன்னுடைய தேசத்தையும், மக்களையும், நிலபுலன்களையும் விட்டு பாவத்தில் வாழ்ந்த பிற இனத்து மக்களை மீட்பதற்காக தன்னையே அர்பணித்த யோனாவைப்போல நீயும் கடவுளிடமிருந்து பிரிந்து வாழும் மக்களைத் திடப்படுத்தி இயேசுவின் அன்பினால், இரக்கத்தினால், மன்னிப்பினால், அவர்களுடைய காயங்களைக் குணப்படுத்தி இறைவார்த்தையினால் அவர்களை உறுதிப்படுத்தி இறைவனில் அவனைக் கட்டியெழுப்பிட நீ தயாரா? மனித உள்ளங்களை இயேசுவின் அன்பினால் பிடித்திட நீ தயாரா? என்ற என்ற வினாக்களை இன்றைய வாசகங்கள் நமக்கு முன் வைக்கின்றன. “உலகின் ஒளி நானே என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார். வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்”(யோவா.8:12) என்ற இயேசுவின் வார்த்தைகளுக்கு ஏற்ப இறைவனுடைய பிரசன்னத்தில் நம்மை வலுப்படுத்திக்கொண்டு நம்மை ஒளியுள்ளவர்களாக மாற்றிட இயேசு தன்னோடு இருக்க ‘என் பின்னே வா’ என்று நம்மை நற்செய்தியின் வாசகத்தின் வழியாக அழைக்கின்றார். வாழ்வது ஒருமுறை, அந்த வாழ்வு இயேசுவுக்காக அவருடைய திட்டத்திற்காக என்று நம்மையே இயேசுவுக்கு அர்ப்பணிக்க நாம் தயாரா?